# தமிழர் சமூக ஜனநாயக கட்சியின்
# 2024 காங்கிரஸ் பிரகடனங்கள்

**2024ம் ஆண்டு சித்திரை 21 திகதி மற்றும் 22ம் திகதி நடைபெற்ற தமிழர் சமூக ஜனநாயகக் கட்சியின் காங்கிரஸ் தீர்மானித்த அரசியற் திட்டத்தில் உள்ளவற்றை அடிப்படையாகக் கொண்டு, 2024ம் ஆண்டு சித்திரை மாதம் 28ம் திகதி தமிழர் சமூக ஜனநாயகக் கட்சியின் தலைமை அமைப்பான மத்திய நிறைவேற்றுக் குழு தயாரித்து வெளியிட்ட அரசியற் கொள்கைப் பிரகடனங்கள்**

1. இந்திய - இலங்கை சமாதான உடன்பாட்டின் அடிப்படையில் உருவான 13வது திருத்த சட்ட மூலத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை முறையாகவும் முழுமையாகவும், எந்த வகையான கரைத்தலோ, குறைத்தலோ அல்லது திருத்தலோ இன்றி, மாகாண ஆட்சிகளுக்கு வழங்கப்பட வேண்டும். அவை அதன்படி சுயாதீனமாகவும் காத்திரமாகவும் செயற்படுவதற்கு வேண்டியனவற்றை நடைமுறைப்படுத்த வேண்டும்.

   மேலும், நாட்டிலுள்ள முஸ்லிம் மக்களுக்கும் மற்றும் மலையக தமிழ் மக்களுக்கும் உரிய வகையாக விசேட அதிகாரப் பகிர்வு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

2. இலங்கை ஆட்சி அதிகாரத்தில் உள்ளவர்கள் சூழ்ச்சித்தனமான முறைகளிலும் சுயநல உள் நோக்கங்களுடனும் நர்ட்டில் மாகாண சபைகளுக்கான தேர்தல்களையும் உள்ளூராட்சித் தேர்தல்களையும் நடத்தாமல் காலம் தள்ளி வருவது வெளிப்படையான ஜனநாயக விரோதமாகும், இது மக்களின் அடிப்படை உரிமைகளைப் பறித்திருக்கும்

நடவடிக்கையாகும். எனவே உடனடியாக இலங்கை அரசாங்கம் அவற்றிற்கான தேர்தல்களை நடத்தி அந்தந்த இடங்களில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் ஆட்சி செய்யும் நிலையை உறுதிப்படுத்த வேண்டும். அத்துடன் எதிர்காலத்தில் ஆட்சி அதிகாரத்தில் அமரும் எந்த அரசாங்கமும் எக்காரணம் கொண்டும் இவ்வாறாக தேர்தல்களை காலம் தள்ளிப் போடுவதற்கு இடமளிக்கா வகையில் நாட்டின் அரசியல் யாப்பில் உறுதியான ஏற்பாடுகளை ஆக்குதல் வேண்டும்.

3. மாகாண ஆட்சி முறைமை, அவற்றிற்கான அதிகாரப் பகிர்வு மற்றும் இவற்றிற்கான தேர்தல்களை காலம் தவறாது நடத்துதல் என்பன இலங்கை முழுமைக்குமான ஜனநாயக கட்டமைப்பை பலப்படுத்துவதற்கும், மாகாண மக்கள் அவரவரது பிரதேசங்களின் அபிவிருத்தி விடயங்களை உரியபடி தீர்மானித்து சிறப்பாக நிறைவேற்றுவதற்கும் இன்றியமைததாகும். எனவே இலங்கையில் மாகாண ஆட்சிகள் அனைத்தும் எப்போதும் அவற்றிற்குரிய அதிகாரங்களை முழுமையாக உடையனவாகவும், அதனடிப்படையில் சுயாதீனமாக செயற்படுபவையாகவும் அமைவற்கான கோரிக்கைகளை முன்வைத்து தமிழர் சமூக ஜனாயகக் கட்சியானது இலங்கையிலுள்ள அனைத்து கட்சிகளுடனும் மற்றும் சமூக செயற்பாட்டார்களுடனும் இணைந்து செயற்படுவதற்கான அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளும்.

4. இன்று தமிழ்த் தேசிய அரசியற் கட்சிகள் எனவும், தமிழ்த் தேசிய கருத்துருவாக்கிகள் எனவும் தமிழ் தேசிய பரப்பு ஊடகங்கள் எனவும் தமிழர்கள் மத்தியில் தம்மை அடையாளம் காட்டி பிரச்சாரங்கள் செய்வதன் மூலம், தமது அரசியற் செல்வாக்கையும், தமது சமூக ஆதிக்கத்தையும் மற்றும் தமது வியாபார பரப்பையும் விரிவாக கட்டமைத்துக் கொள்ள முயலுவோர் தமிழ் மக்களை அரசியல்ரீதியில் தமிழ்த் தேசிய பரப்பினர் என்றும் ஏனையோர் அதுவல்லாதோர் என தாங்கள் அரசியலில் உயர் சாதியினர் போலவும் மற்றையோர் புறக்கணிக்கப்பட வேண்டிய

தீண்டத்தகாதோர் போலவுமான ஓர் அரசியற் பிளவை ஏற்படுத்தும் மலினமான செயற்பாடுகளை பெருமையோடு மேற்கொண்டு வருகின்றனர். அதேவேளை, அவர்கள் தமக்குள்ளேயே பதினைந்து (15) கட்சிகளாக பிரிந்து நின்று, தமிழ் மக்களை பிளவுபடுத்துவதையும், பலயீனப்படுத்துவதுமே சாதித்துக் கொண்டிருக்கின்றனர்.

மாறாக, தமிழர் சமூக ஜனநாயக கட்சியினராகிய நாம், மாகாண ஆட்சி முறையை வலுப்படுத்த வேண்டும் மற்றும் அவை தடையேதுமின்றி அந்தந்த மாகாண மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளால் ஆளப்பட வேண்டும் என்ற கோரிக்கைகளை முன்வைத்தும், இலங்கை வாழ் சிறுபான்மை தேசிய இனங்களின் நலன்களுக்கு பாதகமாக அரசும் மற்றும் பேரினவாத சக்திகளும் மேற்கொள்கின்ற செய்பாடுகளுக்கு எதிராகவும், மேலும் இலங்கையின் பரந்துபட்ட அனைத்து மக்களினதும் சமூக ஜனநாயக உரிமைகளுக்கான கோரிக்கைகளுக்காகவும், இலங்கையின் தமிழ் அரசியல் சமூகத் தரப்புகளுடனும், முஸ்லிம் மக்கள் மற்றும் மலையக மக்கள் மத்தியிலுள்ள அரசியல் சமூக சக்திகளுடனும் மற்றும் முற்போக்கான ஜனநாயக தென்னிலங்கை சக்திகளுடனும் உரிய வகையான ஐக்கிய முன்னணி ஏற்பாடுகளின் அடிப்படையில் எமது செயற்பாடுகளை முன்னெடுக்க உள்ளோம். அத்துடன் இவ்வாறான நிலைப்பாடுகளையும், கோரிக்கைகளையும் கொண்ட அரசியல் சமூக சக்திகளுடனும் நாமாகவே நல்லுறவுகளை ஏற்படுத்தி இணைந்து செயற்படவும் வேண்டியன செய்வோம் என்பதை உறுதியாகத் தெரிவிக்கிறோம்.

5. கடந்த 46 ஆண்டுகளாக நடைமுறையில் அரச கொடூரங்களுக்கு வசதியாகவும், நாட்டு மக்களின் அடிப்படை உரிமைகளை இலகுவாக பறிப்பதாகவும் அமைந்துள்ள பயங்கரவாத தடைச்சட்டம் உடனடியாக முற்றாக நீக்கப்பட வேண்டும்.

அதுமட்டுமல்லாது, அதையொத்த அல்லது அதற்கு மாற்றான எந்தவொரு புதிய சட்டமும் நாட்டுக்குத் தேவையில்லை. எனவே இனிமேல் அவ்வாறான ஒரு சட்டத்தை ஆக்குவதற்கோ நடைமுறைப்படுத்துவதற்கோ இலங்கையின் ஆட்சி அதிகாரத்தில் அமரும் எவரும் முயற்சிக்கக் கூடாது.

மேலும் தற்போதுள்ள பயங்கரவாத தடைச் சட்டத்தின் கைது செய்யப்பட்டு பல்லாண்டுகளாக சிறைக் கொடுமைகளுக்கு உள்ளாக்கப்பட்டுள்ள அனைத்து அரசியற் கைதிகளும் காலதாமதம் எதுவுமின்றி உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டும்.

6. இந்த நாட்டின் நவீன பொருளாதார வளங்களை கட்டியெழுப்புவதற்கு தமது கடும் உழைப்பை கடந்த 200 ஆண்டுகளாக பரம்பரை பரம்பரையாக அர்ப்பணித்துள்ள இலட்சக்கணக்கான மலையக தமிழ் தொழிலாளர்கள் இன்னமும் தாம் வாழுவதற்கோ, தமக்கான பொருளாதார பாதுகாப்பை ஏற்படுத்துவதற்கோ வேண்டிய நில உரிமையை பெற முடியாதவர்களாக உள்ளனர். இவர்கள் தமக்கென சொந்த முகவரியைக் கூட கொண்டிருக்க முடியாதவர்களாக உள்ளனர். எனவே இலங்கை ஆட்சியாளர்கள் இத் தொழிலாளர் குடும்பங்கள் சுதந்திரமாக வசிப்பதற்கும், சுயாதீனமான பொருளாதார பாதுகாப்பு உடையவர்களாக ஆவதற்கும் அவசியமான அளவு நிலத்தை காலதாமதமினி வழங்குதல் வேண்டும்.

7. இந்த நாடு பல இன, மத, கலாச்சாரங்களின் நாடு என்பது அரசியல் அமைப்பால் திட்டவட்டமாக உறுதி செய்யப்பட வேண்டும். அதற்கு உரிய வகையாக இந்த நாடு எந்தவொரு மதத்திற்கும் சார்பானதாகவோ அல்லது எந்தவொரு இனத்தையும் பாரபட்சமாக நடத்துவதாகவோ அல்லது எந்தவொரு சமூகத்தவரதும் கலாச்சாரத்துக்கும் வரலாற்றுப் பாரம்பரியத்துக்கும் அச்சுறுத்தலாகவோ இருக்கக் கூடாது.

8. சாதாரண மக்களின் கண்ணியமான வாழ்விற்கான அடிப்படை பொருளாதார உரிமைகளை உறுதி செய்வது அரசின் முதற் கடமையாக அமைய வேண்டும்.

- அந்த வகையில் உணவு, உடை, வீடு, மருந்துப் பொருட்கள் மற்றும் போக்குவரத்து வசதி ஆகியனவற்றை மக்கள் குறைந்த செலவில் பெறுவதற்கான நிலைமையை அரசு உறுதி செய்ய வேண்டும்
- பள்ளிக் கூட ஆரம்ப வகுப்பு தொடக்கம் பட்டப் படிப்பு வரை தரமான கல்வியையும், அத்தியாவசியமான வைத்திய வசதி வாய்ப்புக்களையும் அனைத்து மக்களும் இலவசமாக பெறுவதை அரசு உறுதி செய்யவேண்டும். இவ்விடயங்களை தனியார் வர்த்தக மயமாக்கலுக்கு திறந்து விடுவது நாட்டு மக்களின் அடிப்படை வாழ்வுரிமையை நிராகரிப்பதாகும்.
- சுயமாக உழைத்து வாழும் வயதையுடைய அனைவரும் வேலைவாய்ப்பைப் பெறுவது அடிப்படை வாழ்வுரிமைகளில் ஒன்றாகும். அதனை அரசு உறுதிப்படுத்த வேண்டும். வேலைவாய்ப்பைப் பெற முடியாத நிலையில் இருப்பவர்கள் மற்றும் வேலைவாய்ப்பை இழந்த நிலையில் இருப்பவர்களுக்கு போதிய பொருளாதார பாதுகாப்பு உதவியை அரசு வழங்குதல் வேண்டும்.

9. தொழிற் சாலைத் தொழிலாளர்கள், விவசாய உழைப்பாளர்கள், மீனவ தொழிலாளர்கள் மற்றும் தனியார் சேவைத் துறைத் தொழிலாளர்கள் போன்றோருக்கான பொருளாதார மற்றும் சமூக பாதுகாப்புகளுக்கு இந்த நாடு முன்னுரிமைகள் வழங்குவதாக இருக்க வேண்டும்

10. இட்டுக்கட்டிய வரலாற்றுத் திரிபுகளைக் கொண்டும், சட்ட விரோதமாக ஆயுதப் படைகளின் துணை கொண்டும், பேரின மேலாதிக்க நோக்கங்களுடன் வன பரிபாலன திணைக்களம், தொல்பொருட்கள்

திணைக்களம், காணி அபிவிருத்தி அமைச்சு, நீர்ப்பாசனத் திணைக்களம் மற்றும் மகாவல அபிவிருத்தி சபை போன்ற அரச நிறுவனங்களும் மற்றும் மத நிறுவனங்களும் இலங்கையின் சிறுபான்மையான தேசிய இன சமூகத்தினரின் பொருளாதார உரிமைகளையும் வாழ்வாதாரங்களையும் ஆதாரங்களையும் பறிக்கின்ற விதமாக மற்றும் சமூகங்களின் பாரம்பரிய உரிமைகளை நிராகரிக்கின்ற விதமாக மேற்கொள்கின்ற நில ஆக்கிரமிப்புகளை அரசு உடனடியாக நிறுத்த வேண்டும். இவை ஏற்கனவே இன அடிப்படையில் பிளவுபட்ட இலங்கையை நிரந்தர பகைமைக்குள் தள்ளி விடுகின்ற காரணிகளாகவே அமைகின்றன என்பதை அரசு உணர வேண்டும்.

11. வடக்கு கிழக்கில் இன்னமும் தொடருகின்ற இராணுவ பிரசன்னத்தின் அளவும் தன்மைகளும் இங்கு வாழும் மக்களிடையே அச்சத்தையும் விரக்தியையும் வெறுப்பையுமே தொடர்ந்து வளர்க்கிறது – பராமரிக்கிறது. பெருமளவுக்கு ஆயுதப் படைகளின் முகாம்களைத் தொடர்ந்து பராமரிப்பதுவும், நாட்டின் தேவைக்கு அதிகமாக ஆயுதப் பபடையினரின் எண்ணிக்கையைக் கொண்டிருப்பதுவும் இலங்கையின் இனங்களுக்கிடையில் நல்லுறவுகளுக்கு பாதகமானதாகும் என்பது மட்டுமல்ல, நாட்டின் தேசிய பொருளாதாரத்துக்கும் பாதகமானதாகும். இதனை உணர்ந்து நாட்டில் ஆயுதப் படைகளின் முகாம்களையும் ஆயுதப் படையினரின் எண்ணிக்கையையும் வெகுவாகக் குறைக்கும் நடவடிக்கைகளை ஆட்சியாளர்கள் விரைவாக மேற்கொள்ள வேண்டும்.

12. காணாமல் ஆக்குதல் மூலம் பெருவாரியானோரை கொன்றொழித்தமை என்பது இந்த நாட்டில் இயல்பான ஒன்றாக 2009 வரை நீடித்தது. அனைத்து கோணத்திலிருந்தும் மேற்கொள்ளப்பட்ட படுகொலைகள் தொடர்பாகவும் காணாமல் ஆக்கப்பட்டமைகள் பற்றியும் அனைத்து மக்கட் பிரிவினரும் சமூக அமைப்புகளும் கரிசனைகள் கொண்டிருப்பது அவசியமே. அதேவேளை அவை இனிமேல் எந்த சந்தர்ப்பத்திலும் அத்தகைய மனிதகுல விரோத

செயற்பா:டுகள் நிகழாமல் இருப்பதற்கான ஏற்பாடுகளை சட்டரீதியாகவும், உரிய நிறுவன செயற்பாடுகள் மூலமும், மக்களிடையே அவை பற்றி அறிவுபூர்வமான உணர்வையும் விழிப்புணச்சியையும் ஏற்படுத்துவதன் மூலம் உறுதி செய்தல் வேண்டும்.

13. போதை வஸ்து எமது இளைய சமுதாயத்தை அரித்தழித்து வருகிறது. இளைய சமுதாயத்தை பாதுகாப்பதற்கான அனைத்து வகையான சட்ட நடவடிக்கைளும் சமூக செயற்பாடுகளும் மேற்கொள்ளப்பட வேண்டும். போதை வஸ்த்துக்களின் பாவனைகளால் ஏற்படும் விளைவுகள் யுத்த பேரழிவுகளுக்கு நிகரான அளவுக்கு அபாயகரமானது என்பதை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும்.

14. இலங்கையின் வட பகுதியில் நிலவும் சாதி பேத செய்பாடுகள் நிற பேத வாதத்துக்கு கொஞ்சமும் குறைந்ததல்ல. இதற்கு எதிரான விழிப்புணர்வு சமூகத்தினரின் அனைத்துப் பிரிவினரிடையேயும் எழுச்சி பெற வேண்டும். சாதியத்தின் தொடர்ச்சியானது தென்னாசிய நிலப்பிரபுத்துவ அநாகரீகத்தின் தொடர்ச்சி என்ற எண்ணம் வேண்டும். சாதிய சண்டித் தனங்கள், வன்முறைகள், புறக்கணிப்புகள், இழிவுபடுத்தல்கள் மற்றும் பாரபட்சங்களுக்கு எதிரான சட்ட மற்றும் சமூக செயற்பாடுகள் ஒரு சமூக மறுமலர்ச்சி இயக்கமாக உக்கிரம் பெற வேண்டும். இவை தாயக தளத்தில் மட்:டுமல்ல தமிழர்கள் புலம் பெயர்ந்து வாழும் நாடுகளிலும் முன்னெடுக்கப்பட வேண்டும்.

15. பெண்கள் தேசிய மற்றும் சமூக தளங்களின் பல்வேறு மட்டங்களிலும் வன்முறை கொடூரங்களுக்கும், புறக்கணிப்புகளுக்கும், பாரபட்சங்களுக்கும், இழிவுபடுத்தல்களுக்கும், அவமானங்களுக்கும் உள்ளாக்கப்படுகின்றமை சர்வசாதாரணமாகவே உள்ளன. யுத்தங்களின் போதும் சமூகங்களுக்கிடையிலான மோதல்களின் போதும் பெண்களே பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். குடும்ப கட்டமைப்புகளும் பெண் அடக்குமறைகளைப்

பராமரிப்பவையாகவே உள்ளன.  எனவே பால் சமத்துவத்தையும், பெண் விடுதலையையும் நிலைநாட்டுவதற்கான சமூக சம நீதி இயக்கங்கள் இங்கு அவசியமாகின்றன. அரச பிரதிநிதித்துவங்களிலும் மற்றும் அரச வேலை வாய்ப்புகளிலும் பெண்களுக்கு சம வாய்ப்புகள் வழங்கப்பட வேண்டும், சட்டரீதியான சமூக பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். தாய்மை என்ற அடிப்படையிலும் மற்றும் இயற்கை நியதிகளின் காரணமாகவும் பெண்களுக்கு வழங்கப்பட வேண்டிய சலுகைகள் மற்றும் முன்னுரிமைகள் போதிய அளவுக்கு வழங்கப்பட வேண்டும்.

16. அன்றாடம் நிகழும் வீதி விபத்து மரணங்கள் இதுவரை கண்டிராத அளவில் வேகம் எடுத்துள்ளன. பொறுப்பான சாரதீயம், வீதி ஒழுங்கு வேக கட்டுப்பாடு, போக்குவரத்து சட்ட ஒழுங்கு ஏற்பாடுகள் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு இப்போது மிகமிக அவசியமானவையாக ஆகியுள்ளன. எனவே இவ்விடயத்தில் ஆட்சியாளர்களும், உரிய அரச நிறுவனங்களும், சமூக தலைவர்களும், சமூக ஆர்வலர்களும் மிகுந்த அக்கறையுடன் செயற்பட வேண்டும்.

17. இலங்கையில் தேசியரீதியில் இனவாத அரசியற் சக்திகளால் எமது மக்கள் மத்தியில் இன மத மோதல்கள் தூபமிடப்பட்டு வளர்க்கப்பட்டன. இதன் விளைவாக, இந்த நாடு 30 ஆண்டுகளுக்கு மேல் உள்நாட்டு யுத்தத்தால் சீரழிந்தது. இன்னமும் இனங்களுக்கிடையில் சமத்துவமும் சகோதரத்துவமும் முன்னேற்றமடைவதற்கு வேண்டியன செய்யப்படவில்லை. இவை மேலும் பகைமை முறுகலோடு இருப்பதற்கான வேலைகளையே அரசு நிறுவனங்களும் பேரின மேலாதிக்க வாதிகளும் குறுகிய தேசிய வாதிகளும் மேற்கொள்கின்றனர். இதேவேளை, அண்மைக் காலமாக தமிழர்கள் மத்தியில் மத பேதங்களைத் தூண்டுவதற்கும் அதனடிப்படையில் வன்முறைகளுக்கு வழி கோலுவதற்குமான சதி வேலைகள் நடைபெற்று வருகின்றன. இவற்றை முறியடிக்க முற்போக்கு ஜனநாயக அரசியற் சக்திகளும் சமூக

சமத்துவத்தில் அக்கறை கொண்ட புத்திஜீவிகளும் ஒருவரோடுவர் கைகோர்த்து செய்பட வேண்டும்.

18. 2022ல் நாடளாவிய “அறகலய” மக்கள் எழுச்சியின் அபிலாஷைகள் தொடர்ந்து கருத்தில் கொள்ளப்பட வேண்டும். ஊழலுக்கும், குடும்ப வாரிசு அரசியல் அதிகாரத்துக்கும் முடிவு கட்டும் இலக்கோடு எழுந்த அந்த இயக்கம் வரையறுக்கப்பட்ட குறிப்பிட்ட வெற்றியை சாதித்தது என்பதை மறுப்பதற்கில்லை. ஊழல் மோசடி அரசியற் குழுக்கள் மீண்டும் தம்மை அதிகாரத்தில் நிலை நிறுத்திக் கொண்டார்கள். இருப்பினும் ஊழல் மோசடிகளுக்கும், அதிகார துஷ்பிரயோகங்களுக்கும், எதேச்சாதிகாரத்துக்கும் எதிரான போராட்டம் தொடரவே செய்யும். இந்த நாட்டிலுள்ள நோய் பிடித்த முதலாளித்துவ அரசியல் பொருளாதார கட்டமைப்பு எத்தனைதான் நவதாராளவாத நாடகங்களை நடத்தினாலும் மீண்டும் மீண்டும் இந்த நாட்டில் “அறகலய” எழுச்சிகள் ஏற்படுவதுவதும் அவற்றினூடாக புரட்சிகரமான மாற்றங்களை நோக்கி முன்னேற்றங்கள் ஏற்படுவதுவும் தவிர்க்க முடியாததாகும்.

19. இந்திய - இலங்கை அரசுகள், தொழிற்சங்கங்கள், மற்றும் சிவில் சமூக அமைப்புகள் ஆகியவற்றிற்கு இடையே தொடர்ச்சியாக நிகழும் தொடர்பாடல்கள் மூலமே தமிழக - ஈழ மீனவர்களுடைய பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியும். பாக்கு நீரிணையில் மடிவலை - இழுவலை மீன்பிடி முறை முற்றாக நிறுத்தப்பட வேண்டும் - தடை செய்யப்பட வேண்டும். இது கடல் வளச் சூறையாடல் என்பதோடு, கடல் வள பேரழிவுக்கு வழ ிவகுப்பதாகும் என்பதை அனைத்து தரப்பினரும் மனம் கொள்ள வேண்டும்.

இரு பக்க மீனவர்களிடையேயும் பரஸ்பர நலன்கள் தொடர்பான நல்லுறவுகளும் தொழிலாளி வர்க்க ஒருமைப்பாடும் பாதுகாக்கப்பட வேண்டும். முரண்பாடுகளை பேச்சுவார்த்தைகள் மற்றும் கலந்துரையாடல்கள் மூலமே தீர்க்க வேண்டும். இதில் கடலெல்லை மீறல் மற்றும் கச்சதீவு

விவகாரம் ஆகியவற்றை இணைத்துப் பார்ப்பது குழப்பங்களையே ஏற்படுத்தும். இந்த விடயத்தில் தமிழக அரசு இலங்கைத் தமிழ் மீனவ குடும்பங்களின் வாழ்வாதாரம் பற்றிய விடயங்களை பிரதானமாக கருத்தில் கொண்டு உரிய நடவடிக்கைகளை விரைந்து மேற் கொள்ள வேண்டும்.

20. உலகில் விரல் விட்டு எண்ணக் கூடிய ஒரு சிலர் பல்லாயிரம் கோடி டாலர்கள் கொண்ட சொத்துக்களுக்கும் வருமானத்துக்கும் சொந்தக்காரர்களாக இருக்க, பல நூறு கோடி மக்கள் பஞ்சை பராரிகளாக பஞ்சம், பசி, பட்டினி, வேலையின்மை, கடன் சுமை ஆகியவற்றோடு வாழ நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கிறார்கள். சிறு எண்ணிக்கை கொண்ட பகுதியினரின் நலன்களுக்காக எனவுள்ள இந்த உலக ஒழுங்கு தகர்க்கப்பட வேண்டும். அதற்குப் பதிலாக, உலகில் வாழும் மிகப் பெரும்பான்மையான மக்களின் நலன்களுக்கான உலகம் என அமையும் புதியதோர் ஒழுங்கு இங்கு நிலை நாட்டப்பட வேண்டும்.

21. 1948ம் ஆண்டிலிருந்து சியோனிஸ்டுகளின் ஆக்கிரமிப்புகளுக்கும் இனப்படுகொலைகளுக்கும் பாலஸ்தீன மக்கள் உள்ளாக்கப்பட்டு பல்லாயிரக்கணக்கில் படுகொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். இது மேற்காசியா முழுவதிலும் அமைதியின்மையையும் அவலங்களையம் அழிவுகளையுமே நிரந்தரமாக்கியிருக்கிறது. அத்துடன் உலகம் முழுவதையும் பதட்டத்தில் ஆழ்த்தியிருக்கிறது.

காஸாவிலும் மேற்குக் கரையிலும் இன சங்காரத்தை உடனடியாக முடிவுக்குக் கொண்டு வருவதுவும், பாலஸ்தீன - இஸ்ரேல் பகைமை முரண்பாடுகளுக்கு ஓர் நிரந்தர தீர்வினை அடைதலுமே மேற்காசியாவில் அமைதி நிலவுவதையும் - அது தொடர்பில் உலகம் நிம்மதி பெறுதலையும் சாத்தியமாக்கும். எனவே, பாலஸ்தீனம் மற்றும் இஸ்ரேல் என்ற இரண்டு நாடுகளும் ஒன்றையொன்று பரஸ்பரம் அங்கீகரித்து சகோதரத்துவமாக வாழும் நிலையை உலகம் உறுதிப்படுத்த வேண்டும்.

22. எமக்கென ஒரே பூமியே உள்ளது. அது வேகமாக மனிதர்களுக்கு வாழ முடியாத கோளமாக மாறி வருகிறது. எனவே எமது இயற்கை வளங்களை பாதுகாப்பதற்கும் பராமரிப்பதற்குமான ஏற்பாடுகள் முக்கியத்துவம் அடைய வேண்டும். நாம் வாழும் சுற்றாடல்கள் நச்சு வகைகளால் நிறைவதற்கு எதிரான அனைத்து விதமான விழிப்புணர்வு மற்றும் சமூக மற்றும் சட்ட நடவடிக்கைகள் தீவிரமாக வேண்டும்.

23. இலங்கையின் தேசிய சமூகங்களுக்கிடையே சமத்துவ அடிப்படையிலான சகோதரத்துவத்தை கட்டியெழுப்ப முனைகிற அதே பிரயாசையுடன், உலகளாவிய ரீதியில் நீதிக்காகவும், சுதந்திரத்துக்காகவும், சுரண்டல்களுக்கு எதிராகவும், சமத்துவத்திற்காகவும் சகோதரத்துவ உறவுகளுக்காகவும் போராடும் மக்களுடனும் மற்றும் சமூக ஜனநாயக முகம் கொண்ட தேசங்களுடனும் கை கோர்த்து நிற்போம்.

இன்றைய காலகட்டத்தில் கருத்திற் கொள்ளப்பட வேண்டியவைகளாக பல இருப்பினும், மேற்குறிப்பிட்டவைகளை இன்றைய காலகட்டத்திற்கு மிகவும் கரிசனைக்குரிய விடயங்களிற் பிரதானமானவை என தமிழர் சமூக ஜனநாயக கட்சி தீர்மானித்து, அவற்றை கட்சியின் கொள்கைப் பிரகடனமாக வெளிப்படுத்துகிறது.

**தமிழர் சமூக ஜனநாயகக் கட்சியின் மத்திய குழு சார்பாக**
**கட்சியின் பொதுச் செயலாளர்**
**வை. விக்கினேஸ்வரன்**
**28 – 04 - 2024**